(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR

O.S.NO. 389/2019

DW 1

Name ஈஸ்வரி

Father's/Husband Name

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

28.07.2023.

முதல் விசாரணை

(சத்தியபிரமாணம் வாக்குமூலமாக உள்ளது)

எனது மற்றும் எனது மகன் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். அது பிவாதசாஆ 1 வரிசை (அசல் குறுக்கு விசாரணை சமயத்தில் தாக்கல் செய்யவேண்டும்.) எங்களது குடும்ப அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். அது பிவாதசாஆ 2. (அசல் குறுக்கு விசாரணை சமயத்தில் தாக்கல் செய்யவேண்டும்.) எனது வாக்காளர் அட்டை நகல் பிவாதசாஆ 3. (அசல் குறுக்கு விசாரணை சமயத்தில் தாக்கல் செய்யவேண்டும்.) எனது மாமியார் மற்றும ்கணவரின் வாக்காளர் அட்டை நகல் பிவாதசாஆ 4 வரிசை. (அசல் குறுக்கு விசாரணை சமயத்தில் தாக்கல் செய்யவேண்டும்.) தாவா சொத்தின் வில்லங்க சான்று பிவாதசாஆ 5. எனது மாமானர் மற்றும் மாமியாரின் இறப்பு சான்று நகல் தாக்கல் செய்கிறேன். அது பிவாதசாஆ 6. (அசல் குறுக்கு விசாரணை சமயத்தில் தாக்கல் செய்யவேண்டும்.) மாமியாரின் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன் அது பிவாதசாஆ 7. (அசல் குறுக்கு விசாரணை சமயத்தில் தாக்கல் செய்யவேண்டும்.) எனது கணவரின் இறப்பு சான்று பிவாதசாஆ 8. (அசல் குறுக்கு விசாரணை சமயத்தில் தாக்கல் செய்யவேண்டும்.) எனது கணவரின் வாரிசு சான்று பிவாதசாஆ 9. (அசல் குறுக்கு விசாரணை சமயத்தில் தாக்கல் செய்யவேண்டும்.) எனது மாமானர் பெயரில் உள்ள பசலி 1374 மற்றும் 1376 உரிய வரி ரசீது பிவாதசாஆ 10. என் மாமானர் பெயரில் இருக்கும் வீட்டு வரி

ரசீது பிவாதசாஆ 11. 2005 முதல் 2008 வரைக்கான குப்பம் கண்டிகை வீட்டிற்கான வீட்டு வரி ரசீதுகள் நான்கு பிவாதசாஆ 12. மேலும் வரி ரசீதுகள் மொத்தம் ஆறு பிவாதசாஆ 13. எனது மாமியார் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் 2009 முதல் 2017 வரை மொத்தம் ஒன்பது பிவாதசாஆ 14. குடிநீர் வரி ரசீது எண்ணிக்கை ஆறு தாக்கல் செய்கிறேன் அது பிவாதசாஆ 15. 08.01.2001 அன்று ஏற்பட்ட பாகபிரிவினைக்கான சான்றிடப்பட்ட நகல் பிவாதசாஆ 16. 17.10.1959 தேதியிட்ட எனது மாமானர் பெயரில் உள்ள கிரைய பத்திரம் தாக்கல் செய்கிறேன். கிரைய பத்திரம் தெலுங்கு மொழியில் எழுதப்பட்டுள்ளதால் அதன் மொழிபெயர்ப்பு தமிழில் இணைத்து தாக்கல செய்கிறேன். அது பிவாதசாஆ 17. ( ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) எனது மாமியார் வாதிகள் 1 முதல் 3க்கு எதிராக திருவாலங்காடு காவல் நிலையத்தில் சொத்து குறித்து 13.11.2016 அன்று கொடுக்கப்பட்ட புகாருக்கு காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட சிஎஸ்ஆர் ரசீது தாக்கல் செய்கிறேன். அது பிவாதசாஆ 18. 13.11.2016 தேதியிட்ட காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் பிவாதசாஆ 19. மீண்டும் 14.12.2016 அன்று காவல் கண்காணிப்பாளருக்கு கொடுத்த புகாரின் நகல் பிவாதசாஆ 20. 15.10.2018 தேதியிட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரின் நகல் பிவாதசாஆ 21. எனது மாமியார் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் காவல் கண்காணிப்பாளர் எடுத்த நடவடிக்கை குறித்து விவரம் கேட்டப்போது காவல் கண்காணிப்பாளர் அவர் வழங்கிய நடவடிக்கைக்கான கடிதம் பிவாதசாஆ 22. OS 21/2014 என்ற வழக்கில் இந்த வழக்கின் வாதிகள் கூர்சீட்டு தாக்கல் செய்திருந்தார்கள் அந்த ஆவணத்தின் நகலை கோரியபோது அந்த ஆவணம் வாதிகள் திரும்ப பெற்றுக்கொண்டதாக திருப்பப்பட்டது. அவ்வாறு வாக்காலத்துடன் நாங்கள் தாக்கல் செய்த நகல் கோரும் மனு தாக்கல் செய்கிறேன். அது பிவாதசாஆ 23. எனது பெயரில் உள்ள வீட்டுவரி ரசீதுகள் பிவாதசாஆ 24. நாங்கள் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் காவல் கண்காணிப்பாளரிடம் கேட்ட கேள்விகளுக்கு அவரால் வழங்கப்பட்ட பதில்

பிவாதசாஆ 25. 23.05.2019 மற்றும் 09.07.2019 தேதியிட்ட புகார்கள் முறையே பிவாதசாஆ 26 மற்றும் 27. எனது மகன் சூரியாவின் பிறப்பிடச்சான்றிதழ் இணையத்தில் பெறப்பட்டது தாக்கல் செய்கிறேன். அது பிவாதசாஆ 28. 5ம் பிரதிவாதி 14.07.2014 அன்று திருவாலங்காடு காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாரின் நகல் தாக்கல் செய்கிறேன். அது பிவாதசாஆ 29. (5ம் பிரதிவாதி இறந்தவிட்டபடியாலும் இந்த வழக்கில் அவர் வருகையில்லா ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. ) எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.